உ

சிவமயம்

தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !!



ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி



ஸ்ரீ ஸ்வர்ணஸ்தாபணேஸ்வர்



ஸ்ரீ ரெங்கநாயகி



ஸ்ரீ ரெங்கநாதர்

**இந்து சமய அறநிலையத்துறைக்கு உட்பட்ட**
**ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பாள் சமேத ஸ்ரீஸ்வர்ணஸ்தாபணேஸ்வர ஸ்வாமி**
**ஸ்ரீ ரெங்கநாயகி சமேதஸ்ரீ ரெங்கநாதர் திருக்கோவில்**
**சித்தாய்மூர் (திருச்சிற்றேமம்) திருக்குவளை வட்டம், நாகை மாவட்டம்**

திரு ஞானசம்பந்தரால் பாடல் பெற்ற சிறப்பு வாய்ந்த கோவில்

# மஹா கும்பாபிஷேகம் மற்றும் மஹா ஸம்ப்ரோக்ஷண பத்திரிகை

**பராபவ வருஷம் ஆனி மாதம் 12ம் நாள்**

**26-06-2026 வெள்ளிக்கிழமை காலை 07:00 – 10:30**

**திருக்கோயில் திருமுறை**


‘நிறை வெண்டிங்கள் வான்முக மாதர் பாட நீள்சடைக்
குறை வெண்டிங்கள் சூடியோர் ஆடல்மேய கொள்கையான்
சிறைவண்டியாழ்செய் பைம்பொழிற் பிழனஞ்சூழ் சிற்றேமத்தான்
இறைவனன்றே யுலகெலாம் ஏத்த நின்ற பெருமானே’

*– சம்பந்தர் தேவாரம்*

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா. அமர ரேறே. ஆயர்தம் கொழுந்தே. என்னும்,
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோக மாளும்,
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு ளானே




ஓம் ஸ்ரீ குருப்யோ நமஹ: ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர









**ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்,**
**ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்** அவர்களின்
ஆக்ஞையின்படியும் பரிபூரண அநுக்ரகத்துடனும்

# ஸ்ரீ காஞ்சி காமகோடி மடம் 70வது பீடம்

**ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**
அவர்களின் பரிபூரண அநுக்ரகத்துடனும்

**ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பாள் சமேத ஸ்ரீஸ்வர்ணஸ்தாபனேஸ்வர ஸ்வாமி**
**ஸ்ரீ ரெங்கநாயகி சமேத ஸ்ரீ ரெங்கநாதர் திருக்கோவில்**

# ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன
# மஹா ஸம்ப்ரோக்ஷணம் மற்றும் கும்பாபிஷேகம்



## பேரன்புமிக்க சிவநேயச் செல்வர்காள்



சைவத்தின் தலைமை பீடமாகவும், மூலாதாரஸ்தலமாகவும் விளங்கும் திரு. ஆரூர்பதிக்கு அருகிலும் ஸப்த விடங்க தியாகராஜ ஸ்தலங்களுக்கு ஹ்ருதய ஸ்தானத்திலும் அமைந்தஸ்தலமாகிய திருச்சிற்றேமம் (சித்தாய்மூர்) எனும் இத்தலத்தில் நான்கு யுகங்களிலும் பற்பல தேவர்களாலும், ரிஷிகளாலும் வழிபடப்பட்ட ஸ்வயம்பு மூர்த்தியாக எழுந்தருளியுள்ள ஸ்ரீபொன்வைத்தநாத ஸ்வாமி ஆனவர் எழுந்தருளிய புராணம் பின்வருமாறு.



சுமார் 1400 வருடங்களுக்கு முன் முத்தரசபுரம் என்னும் ஊரினை தலைநகராகக்கொண்டு இப்பகுதியை ஆண்டு வந்த முத்தரச சோழனின் அரண்மனைக்கு இவ்வூர் வழியாக பசும்பால் கொண்டு செல்லும் போது ஒரு குறிப்பிட்ட இடத்தில் பால்குடம் கீழே விழுந்து உடைவதும், பசுக்கூட்டங்கள் அவ்விடத்தை கடக்கும்போது தாமே பால்சொறிந்து வருவதையும் அறிந்த சோழமன்னன் அவ்விடத்தை அகழ்ந்தபோது கடப்பாறை பட்டு ரத்தம் பீறிட்ட காயங்களுடன் ஸ்வாமி வெளிப்பட அதனை பரமேஸ்வரன்தான் என்றுணர்ந்த முத்தரசசோழ மன்னன் அவ்விடத்தில் கருங்கல் கட்டிடம் எழுப்பிய ஆலயமே இத்திருக் கோயிலாகும்.



இத்தல இறைவனை தினந்தோறும் இரவு அர்த்த ஜாமத்தில் வழிபடுவதை வழக்கமாகக் கொண்ட ப்ரஹ்மரிஷி மற்றும் அவருடைய சகாக்கள் ஒருநாள் இரவு காலதாமதமாக நடையடைத்த பின் தரிசனத்திற்கு வந்து எம்பெருமானை எப்படியேனும் தரிசிக்க அருளவேணும் என பிரார்த்திக்க இறைவனும் மனமிறங்கி தேனீ வடிவம் தாங்கி சாளரத்தின் வழியே தம்மை தரிசிக்க அருளினார். அப்படி தரிசித்த ரிஷிக்கூட்டங்கள் இறைவனை பிரிய மனமின்றி தேனிக்களாகவே இவ்வாலயத்தில் தங்கி இன்றுவரை வழிபட்டு வருவது இவ்வாலய சிறப்பாகும். சித்தர்களால் வழிபடப்படுவதால் இவ்வூர் சித்தாய்மூர் என்றழைக்கப் படுகிறது.



மேலும் இவ்வூரில் வாழ்ந்த வணிகர்குல இளந்தம்பதியரின் பக்தியையும், அம்மனையாளின் கற்பின் மாண்பினையும் உலகிற்கு உணர்த்த இறைவண் புரிந்த திருவிளையாடல் தான் இன்றும் நாம்காணும் நந்தி, பலிபீடம் முன்பின் மாற்றியது. ஸ்தல விருக்ஷமும், ஸ்தல விநாயகரும் பிராகாரம் விட்டு வெளியே எழுந்தருளியது, செட்டிப்பெண்ணிற்கு பொற்காசு ஈந்தமையாள் பொன்வைத்த நாதர் எனும் பெயர்பெற்றது, அத்தம்பதிக்கு வைகாசி விஸாக நந்நாளில் ரிஷபாரூடராக அகால தரிசனக் காட்சி தந்து அருளியது என அற்புதங்கள் பல இன்றளவும் நிகழ்த்திவரும் இத்தலத்தின் இறைவனைப் போன்றே அன்னை ஸ்ரீ அகிலாண்டேஸ்வரியானவள் திருவானைக்காவில் ஸ்ரீசக்கரத்தின் தாடங்கமாக ஏற்றதுபோல் இங்கு ஸ்ரீசக்ர அர்த்தமகாமேருவினை தனது பீடமாக சிம்மானேஸ்வரியாக எழுந்தருளி பரமேஸ்வரன் பொற்காசு அருளிய செட்டிப்பெண்ணிற்கு தாயாகத் தோன்றி பிரசவம் பார்த்த கருணாசாகரியாக ஸ்ரீ யந்த்ர பீடத்தில் அருள்பாளிக்கும் அன்னை அகிலாண்டேஸ்வரி.



## இத்தலத்திற்கே உரிய புராணச்சிறப்புகள்:



1. ப்ரஹ்மா வழிபட்ட ஸ்தல மாகையால் சதுரலிங்கமூர்த்தி ப்ரஹ்ம புரீஸ்வரர்.
2. அகஸ்திய மஹரிஷியால் வழிபடப்பட்டமையால் அகஸ்தீஸ்வரர்.
3. ஆதிசேஷன், நாகராஜர் வழிபட்டு நாக பஞ்சமி விரதத்தினை வரமாக பெற்ற ஸ்தலம் ஆகையால் சேஷபுரீஸ்வரர்.
4. ஆத்திவனத்தில் எழுந்தருளியமையால் ஆத்திவனநாதர்.
5. ஸ்தல விருக்ஷமாகிய ஆத்திமரம் உள்ள ஸ்தலமானது திருக்கைலாய பர்வதத்திற்கு நிகராக போற்றப்படுகிறது.
6. வில்லேந்திய வேலவர் பாஹூலேய சுப்ரமண்யர் அருளாட்சி புரியும் ஸ்தலம்.
7. தில்லைச் சிற்சபை போல் தாழ்சடையுடன் அருள்காட்சி தரும் சிவகாமசுந்தரி அம்பாள் உடனுறையும் ஸ்ரீமத் நடராஜபெருமான்.
8. சூரியன், துர்க்கை போன்ற பரிவாரங்களுக்கும் புராதன பஞ்சலோக திருமேனிகள்.
9. செட்டியார், செட்டிப் பெண் உலோகத் திருமேனிகள்.
10. ஸ்வாமியின் திருநாமத்தையே தன் பெயராகக் கொண்ட ஸ்வர்ணபுஷ்கரணி தீர்த்தம்.
11. ஆறு கரங்களுடன் அபூர்வ பைரவர்.
12. திருவானைக்காவல் போன்றே தினந்தோறும் உச்சிகால பூஜையில் அம்பிகை தாழம் பூவினை ஏற்கும் ஸ்தலம்.
13. திருஞான சம்பந்தரின் தேவாரத்தில் "தேனார் வண்டு பண்செய்யும் திருவாருஞ்சிற்றேமத்தான்" என ஆரூருக்கு நிகராகப் பாடல் பெற்றத் ஸ்தலம்.
14. திருநாவுக்கரசரின் க்ஷேத்ரக்கோவையில் இடம்பெற்ற ஸ்தலம்
15. ஸ்வாமியின் சத்யோஜ ரத முகத்தை பூஜிக்கும் வண்ணம் அன்னை கஜலக்ஷ்மியானவள் மஹாவிஷ்ணுவின் ஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள ஸ்தலம்.





ஓம் நமோ நாராயண ஸ்ரீமதே ராமானுஜாய

**ஸ்ரீ ரெங்கநாயகி சமேத ஸ்ரீ ரெங்கநாதர் திருக்கோவில்**
**சித்தாய்மூர் (திருச்சிற்றேமம்) திருக்குவளை வட்டம், நாகை மாவட்டம்**
**சிவன் கோவில் வளாகத்திலேயே குடிகொண்டுள்ள பெருமாள்**

# ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா ஸம்ப்ரோக்ஷணம் பத்திரிகை



**பராபவ வருஷம் ஆனி மாதம் 12ம் நாள் 26-06-2026 வெள்ளிக் கிழமை**
**காலை 07:00 - 08:30 மணிக்குள்**

## ஸ்தல வரலாறு

வைஷ்ணவத்தில் கோயில் என்று குறிப்பிட்டால் அது ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தினையே குறிக்கும், அதுபோல் காவிரியின் கிளை நதிகளால் சூழ்ந்த இத்திருச்சிற்றேம திருத்தலத்தில் பாற்கடலை கடைந்து அமிர்தம் பெற தேவர்களுக்கு உதவும் பொருட்டு மத்தாக மாறிய மந்தார மலையினை கடையும் கயிறாக மாறிய ஆதிசேஷன். தன் அயர்வு நீங்கி புத்துணர்வு பெற்றிட இத்தலத்தில் சிவபூஜைசெய்து தான் இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட தவமியற்றினார்.

மஹாவிஷ்னுவானவர் **“சென்றால் குடையாம், இருந்தால் சிங்காசனமாம்”** என்ற ஆழ்வாரின் பாசுரப்படி தம்மை விட்டு அகலாத ஆதிசேஷனையும், அன்னை அகிலாண் டேஸ்வரி யினையும் பிரிய மனமின்றி இத்தளத்தில் வைகுண்ட நாதராக ஸ்ரீரங்க நாயகித்தாயார், ஸ்ரீதேவி பூதேவி உபயநாச்சியார்களுடன் ஸ்ரீ ரெங்கநாதப் பெருமாளாக பாம்பனையின்றி துயில் கொள்ளாதவராய் வீற்றிருந்த கோலத்தில் அருள் பாலிக்கிறார். இத்தலத்தில்தான் ஆதிசேஷன், நாகராஜாவும் கலியுகத்தில் நாகங்களை மக்கள் வெறுக்காமலும், துன்புறுத்தாமலும் இருக்கும் பொடுட்டு நாக பஞ்சமி விரதமனுஷ்டித்து நாகதோஷத்தை போக்கியருளக்கூடிய வரத்தை பெற்றனர். இப்படி பரந்தாமனே இறங்கி வந்து அருள்புரியும் பரம பவித்திரமான இந்த க்ஷேத்திரத்திற்கு அருகாமையில் கீழரங்கம், ஆதிரங்கம் எனும் க்ஷேத்திரங்கள் அரணாக அமையப்பெற்றள்ளது. மஹாவிஷ்னு தனது ஹ்ருதய ஸ்தானத்தில் வைத்து விழிபட்டு வந்த ஸப்த விடங்க தியாகராஜ ஸ்தலங்களுக்கு ஹ்ருதயஸ்தான மாக விளங்கும் இந்த க்ஷேத்திரதில் வீற்றிருக்கும் ஸ்ரீ ரெங்கநாயகி தாயார் ஸமேத ஸ்ரீ ரெங்கநாதப் பெருமாள்.

**இன்றும் நாகராஜர் பெருமாளுக்கு அருகில் இருப்பதை காணலாம்**
**நாகராஜரின் இருப்பிடமான பாம்பு புற்றுக்களையும் காணலாம்.**



பாம்பு ரூபத்தில் பெருமாள் காட்சி



இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த திருக்கோயில்களின் திருப்பணிகள் காஞ்சி சங்கராச்சாரியார்கள், ஆதீன குரு மகா சன்னிதானங்கள் ஆசியுடன் இந்து அறநிலையத்துறை உத்தரவின்படியும் அவர்களின் பெரும் பங்கு அளிப்போடும் தொடங்கப்பட்டு முடிவடைந்த நிலையில் ஸ்ரீ ரெங்கநாயகி சமேத ரெங்கநாதர் மற்றும் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ ஸ்வர்ண ஸ்தாபணேஸ்வரர் மகா சம்ப்ரோக்ஷணமும் மகா கும்பாபிஷேகமும் நாளது நிகழும் மங்களகரமான பராபவ வருஷம் ஆனி மாதம் 12ம் நாள் 26–06–2026 வெள்ளிக்கிழமை துவாதசி திதி விசாகம் நட்சத்திரம் கடக லக்னத்தில் சித்தயோகம் கூடிய சுபதினத்தில் **ஸ்ரீ ரெங்கநாயகி சமேத ரெங்கநாதருக்கு மகா சம்ரோக்ஷணம்** காலை 7:00 மணிக்கு மேல் 8:30 மணிக்குள்ளும் **ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீஸ்வர்ணஸ்தாபணேஸ்வர ஸ்வாமிக்கு** கும்பாபிஷேகம் காலை 9:00 மணிக்கு மேல் 10:30 மணிக்குள் துவாதசி திதி விசாகம் நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சிம்ம லக்கினத்தில் மடாதிபதிகள், ஆதின கர்த்தாக்கள் அமைச்சர் பெருமக்கள், இந்து அறநிலை துறை அதிகாரிகள், அரசாங்க அதிகாரிகள், ஆன்றோர்கள், சான்றோர்கள் முன்னிலையில் கீழ்கண்ட நிகழ்ச்சி நிழலின்படி விமரிசையாக நடைபெறுவதால் பக்தர்கள் பெரும் திரளாக கலந்து கொண்டு இறைவனின் அருளுக்கு பாத்திரம் ஆகும்படி வேண்டுகிறோம்









# நிகழ்ச்சி நிரல் - மஹா ஸம்ப்ரோக்ஷணம்

## ஸ்ரீ ரெங்கநாயகி சமேத ரெங்கநாதர்

### 24-6-2026 புதன்கிழமை ஆனிமாதம் 10ம் நாள்

| | |
|---|---|
| **மாலை 5:00– 8:30** மணி | ஆச்சாரிய அழைப்பு பகவத் பிரார்த்தனை, எஜமான மகா சங்கல்பம் புண்யாஹம், மிருத்சங்கிரஹணம், பேரீ பூஜை, அக்னி மதனம், அங்குரார்பணம், அக்னி பிரதிஷ்டை, கும்ப பூஜை, கலாகர்ஷணம், யாகசாலை பிரவேசி, ததுக்க ஹோமம், பூர்ணாஹுதி, பிரசாதம் வினியோகம். |

### 25-6-2026 வியாழக்கிழமை ஆனிமாதம் 11ம் நாள்

| | |
|---|---|
| **காலை 8:30** மணிக்கு | புண்யாஹ வசனம், அக்னி ஆராதனம், மஹா சாந்தி ஹோமம், ததுக்க ஹோமம், பூர்ணாஹுதி, பிரசாத வினியோகம், |
| **மாலை 5:00** மணிக்கு | புண்யாஹ வசனம், கோ பூஜை, விமான அஷிமோஜனம், சர்வ தேவாரச்சனம், சயனாதி வாசம், ஹெளத்திரம், பிரதான ஹோமம், பூர்ணாஹுதில பிரசாதம் வினியோகம், |

### 26-6-2026 வெள்ளிக்கிழமை ஆனிமாதம் 12ம் நாள்

| | |
|---|---|
| **காலை 6:00** மணிக்கு | புண்யாஹ வசனம், அக்னி ஆராதனம், ததுக்க ஹோமம், பூர்ணாஹுதி, யாத்ரா தானம் |
| **காலை 7:00** மணிக்கு | கும்பம் புறப்பாடு |
| **காலை 8:00** மணிக்கு | விமான கும்பாபிஷேகம், மூலாலய பிரதிஷ்டை, மஹா தீபாரதனை, பிரம்ம கோஷம், வேத இதிஹாச புராண திராவிட வேத விண்ணப்பம், தீர்த்த பிரசாதம் வினியோகம். |

## ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீஸ்வர்ணஸ்தாபணேஸ்வரர்

### 24-6-2026 புதன்கிழமை ஆனிமாதம் 10ம் நாள்

| | |
|---|---|
| **காலை 9:00** மணிக்கு | **முதல் காலம்** அனுக்ஞை, விக்னேஸ்வரர் பூஜை, கணபதி ஹோமம், நவக்ரஹ ஹோமம், லெக்ஷ்மி ஹோமம், தொடர்ந்து வாஸ்து பூஜை, பிரவேசபலி பூர்ணாஹுதி, தீபாரதனை. அருட்பிரசாதம் வழங்குதல். |
| **மாலை 3:00** மணிக்கு | அக்னி ஸங்கிரஹணம் தொடர்ந்து புனித நீர் எடுத்து வருதல். |
| **மாலை 6:00** மணிக்கு | ம்ருத் ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரட்ஷாபந்தனம், கலாகர்ஷணம், கும்ப அலங்காரம், யாகசாலை பிரவேசம். |
| **இரவு 9:00** மணிக்கு | பூர்ணாஹுதி, தீபாரதனை, அருட்பிரசாதம் வழங்குதல். |

### 25-6-2026 வியாழக்கிழமை ஆனிமாதம் 11ம் நாள்

| | |
|---|---|
| **காலை 9:00** மணிக்கு | **இரண்டாம் கால யாக பூஜைகள் ஆரம்பம்** |
| **நண்பகல் 12:00** மணிக்கு | பூர்ணாஹுதி, தீபாரதனை, அருட்பிரசாதம் வழங்குதல். |
| **மாலை 5:00** மணிக்கு | **மூன்றாம் காலம்** தொடர்ந்து பிரம்மசாரி பூஜை, சுஹாஷினி பூஜை, தம்பதிகள் பூஜை, ராக தாளங்கள் பூர்ணாஹுதி, தீபாரதனை, அருட்பிரசாதம் வழங்குதல். |

### 26-6-2026 வெள்ளிக்கிழமை ஆனிமாதம் 12ம் நாள்

| | |
|---|---|
| **காலை 8:00** மணிக்கு | **நான்காம் கால யாக பூஜைகள்** ஆரம்பம். கோ பூஜை முடிந்து நாடி சந்தானம், தத்துவாச்சாரிக்கள் ஸ்பர்ஷாஹுதி, மஹா பூர்ணாஹுதி, மஹா தீபாரதனை, யாத்ராதானம், கிரஹ ப்ரீதி. |
| **காலை 9:30** மணிக்கு | **கலசங்கள் புறப்பட்டு** |
| **காலை 10:30** மணிக்கு | பரிவார மூர்த்திகள், மூலவர் கும்பாபிஷேகமும், ஆதனை தொடர்ந்து துவாதசி திதி விசாக நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சிம்ம லக்னத்தில் **மஹா கும்பாபிஷேகமும்** சிறப்பாக நடைபெறும். |












சிவன் கோயில் சர்வ சாதகம்: கும்பாபிஷேக சாம்ராட்
திருவள்ளியங்குடி **ஸ்ரீ ராமகிருஷ்ண சிவாச்சாரியார்**

பெருமாள் கோவில் சர்வ சாதகம்;
சம்ரோக்ஷண சாம்ராட் **ஸ்ரீ ராமன் பட்டாச்சாரியார்**

ஆலய அர்ச்சகர் ஈஸான சிவம்:
**ராம்நாத் ப்ராஸாத்**

திப்பிராஜபுரம் **ஸ்ரீ ஆராவமுதன் பட்டாச்சாரியார்**
சுந்தர பெருமாள் கோவில்

வேதப்பாராயணம் **ஸ்ரீ சிவார்ப்பணம் டிரஸ்ட் ஸ்ரீ சந்திரமௌலி** தலைமையில் நடைபெறும்.
திருமுறை பாராயணம் காஞ்சிபுரம் **கதிர்வேல் ஓதுவார்** தலைமையில் நடைபெறும்.

சிறப்பு நாதஸ்வரம் நாதஸ்வர கலைச்செல்வன் இலுப்பப்பட்டு **E.S.S. அரவிந்த்** குழுவினர்
நாதஸ்வர இசை மணி ஓமாம் புலியூர் **D. பாபு** குழுவினர்

யாகசாலை அமைப்பு
**தேவகோட்டை செல்வம்**

விழா காலங்களில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

ஸ்ரீ ரெங்கநாதர் திருக்கோயிலையும் ஸ்ரீ பொன்வைத்த நாதர் திருக்கோவிலையும் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்ய எனக்கு அனுமதி அளித்த தமிழக அரசு இந்து சமய அறநிலையத்துறை, செயல் அலுவலர் திருமதி **தனலட்சுமிக்கு** எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.


இந்த நிர்மாண பணியை இரவு பகல் பாராமல், எந்த பிரதிபலனும் பாராமல், கட்டிதர முன் வந்த திரு **M.K.R. நடராஜன்** அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னிடம் நம்பிக்கை வைத்து இந்தப் பணியை ஒப்படைத்த கிராம மக்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பாள் சமேத ஸ்ரீஸ்வர்ணஸ்தாபணேஸ்வர ஸ்வாமிக்கும்,**
**ஸ்ரீ ரெங்கநாயகி சமேத ஸ்ரீ ரெங்கநாதர் ஸ்வாமிக்கும்**
கும்பாபிஷேகம் முடிந்தவுடன் ஒரே மேடையில் திருக்கல்யாணம் நடைபெறும்.

**இக்கோயில் திருப்பணி வேள்வியை சிரமேற்கொண்டு, இக் கும்பாபிஷேகப் பணியை செவ்வனே முடிக்க அனுக்ரகித்து ஆசீர்வதித்த எங்கள் குருநாதன்**

**பூஜ்யஸ்ரீ ஸ்ரீ காஞ்சி காமகோடி மடம் 70வது பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் பாதரவிந்தங்களில் அனந்தகோடி நமஸ்காரங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.**



கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை
**தாமிர**
***Tamiraa WebTV***
மூலம் நேரலையில் காணலாம்.

தாமிரா WEB TV
LIVE

இப்படிக்கு
**மஹாலட்சுமி சுப்பிரமணியம்**
சென்னை– 600 017.
Mobile: 98400 53289
மற்றும்
சித்தாய்மூர் கிராம மக்கள்



YUVASAKTHI PRINTS, Chennai -24 ✆ 98412 96671